Prepp
Your Personal Exams Guide

# UGC NET PAPER 3 JANUARY 03, 2017 SHIFT 1 TAMIL QUESTION PAPER

**Note :** This paper contains **seventy five** (75) objective type questions of **two** (2) marks each. **All** questions are compulsory. (75 × 2 = 150)

குறிப்பு : இவ்வினாத்தாள் எழுபத்தைந்து (75) விடை தெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு (2) மதிப்பெண்கள் உண்டு. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (75 × 2 = 150)

1. நாலடியாரின் காமத்துப்பால் கொண்டுள்ள வெண்பாக்கள்

   (1) 10 (2) 20

   (3) 30 (4) 40

2. உள்ளனவற்றோடு இல்லனவும் சிறிது கூறுதலாகிய புனைந்துரை என்பது

   (1) உலக வழக்கு (2) செய்யுள் வழக்கு

   (3) நாடக வழக்கு (4) தகுதி வழக்கு

3. 'அந்தடி குறைவும் செந்துறைச் சிதைவும்' என்பதில் காரிகை குறிப்பிடும் அடி

   (1) அந்தாதி அடி (2) முதலடி

   (3) இடையடி (4) ஈற்றடி

4. 'கொலைக்களத் தேதிலர்போலக் காதலில் வழி' வருவது

   (1) காலை (2) மாலை

   (3) பகல் (4) இரவு

5. 'ஆர வடமும் அதி சீத சந்தனமும்
ஈர நிலவும் எரி விரியும்'
என்பதில் பயின்று வரும் வேற்றுப்பொருள்வைப்பணி
(1) கூடும் இயற்கை (2) கூடா இயற்கை
(3) இருமை இயற்கை (4) விபரீதம்

6. வேள்விக்கு உகந்த நெல்
(1) சித்திரக்காலி (2) முத்து விளங்கி
(3) ஒத்திரம் (4) கருஞ்குறை

7. பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி தொகுப்பித்தது
(1) அகநானூறு (2) குறுந்தொகை
(3) ஐங்குறுநூறு (4) நற்றிணை

8. "நாடு நட்பினல்லது நட்டு நாடார்தம்
ஒட்டியதோர் திறத் தே" எனப் பாடியவர்
(1) கபிலர் (2) பரணர்
(3) நக்கீரர் (4) ஔவையார்

9. தொல்காப்பியத்தின் படி வியங்கோள் வினை வரும் இடம்
(1) தன்மை (2) முன்னிலை
(3) படர்க்கை (4) மூவிடம்

10. மொழி முதலிலும் இடையிலும் அகரம் இகரமாவதை எக்காலத் தமிழில் காணலாம் ?
(1) சங்க காலம் (2) சோழர் காலம்
(3) பல்லவர் காலம் (4) நாயக்கர் காலம்

11. தொழிலாளர் நல இயக்க வளர்ச்சியில் ஈடுபட்டவர்

(1) ரா. ப. சேதுப்பிள்ளை (2) திரு. வி. க.

(3) ம. பொ. சி. (4) ஆறுமுக நாவலர்

12. ஐந்திலக்கண நூல்களுள் சேராதது

(1) இலக்கண விளக்கம் (2) முத்து வீரியம்

(3) தொன்னூல் விளக்கம் (4) இலக்கணக் கொத்து

13. "நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி

வளிதொழில் ஆண்ட உரவோன்"

(1) கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி

(2) பாலை பாடிய பெருங்கடுக்கோ

(3) கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன்

(4) கரிகாற் பெருவளத்தான்

14. பாண்டரங்கம் ஆடியவன்

(1) சிவன் (2) திருமால்

(3) முருகன் (4) பிரமன்

15. 'தோளிணை முயக்கம்' என்பதில் 'இணை' எனும் உருபு எவ்வேற்றுமையது ?

(1) ஏழாம் (2) ஆறாம்

(3) ஐந்தாம் (4) மூன்றாம்

16. வீட்டின் முன் கதவிற்கும் இரண்டாம் கதவிற்கும் இடைப்பட்ட இடம்

I. இடைக்கட்டு II. இடைகழி

III. இரேழி IV. நடை

இவற்றுள்,

(1) I, II, III சரி (2) II, III, IV சரி

(3) I, II, IV சரி (4) I, II, III, IV சரி

17. பெயர்ப் பயனிலை என்பது

I. வியங்கொள்ள வரும்

II. பண்பு கொள்ள வரும்

III. பெயர் கொள்ள வரும்

IV. வினை நிலை உரைக்கும்

இவற்றுள்,

(1) I, II, III, IV சரியல்ல

(2) I, II, III, IV சரி

(3) I, III, IV சரி

(4) II, III, IV சரி

18. ஈரளவு இசைப்பன

I. ஒ

II. ஓ

III. ஔ

IV. ஐ

இவற்றுள்,

(1) I, III, IV சரி

(2) I, II, IV சரி

(3) II, III, IV சரி

(4) I, II, III, சரி

19. இன்னமுதம் பிள்ளை இயற்றிய அபிதான மணிமாலை என்பது ஒரு

I. சிற்றிலக்கியம்

II. நிகண்டு

III. சோதிட நூல்

IV. புராணக் களஞ்சியம்

இவற்றுள்,

(1) I, III, IV சரியல்ல

(2) II, III, IV சரியல்ல

(3) I, II, III சரியல்ல

(4) I, II, IV சரியல்ல

20. அதிவீரராம பாண்டியன் இயற்றிய புராணங்கள்

I. கலிங்க புராணம்

II. கூடற் புராணம்

III. குமார புராணம்

IV. கூர்ம புராணம்

இவற்றுள்,

(1) I, II சரி

(2) II, III சரி

(3) III, IV சரி

(4) I, IV சரி

21. வினைப் பாலுவமவுருபுகள்

I. அன்ன II. புல்ல

III. மான IV. என்ன

இவற்றுள்

(1) I, II, III சரி (2) I, III, IV சரி

(3) I, II, IV சரி (4) II, III, IV சரி

22. "நெஞ்சுவிடு தூது" என்னும் பெயரில் நூல் படைத்தவர்கள்

I. சிவப்பிரகாச சுவாமிகள் II. உமாபதி சிவாசாரியர்

III. தத்துவராயர் IV. அவிநாசநாதர்

இவற்றுள்,

(1) I, II, III, சரி (2) I, III, IV சரி

(3) II, III, IV சரி (4) I, II, IV சரி

23. கைத்துண்டாம் போழ்து

I. கொன்னே பரவன் பரின் II. பற்றன் பரின்

III. பாத்துண் பரின் IV. யாதும் கரவன் பரின்

இவற்றுள்,

(1) I, II, III, IV சரி (2) II, III, IV சரி

(3) I, II, III சரி (4) I, II, III, IV சரியல்ல

24. 'தாம் நெறிப் பெண்டிர்' என்பார்

I. கற்புடை மகளிர் II. நன்னெறி மகளிர்

III. விலை மகளிர் IV. குல மகளிர்

இவற்றுள்,

(1) I, II, III சரியல்ல (2) II, III, IV சரியல்ல

(3) I, III, IV சரியல்ல (4) I, II, IV சரியல்ல

25. ஐயா > அய்யா, ஔவை > அவ்வை, சாம்பல் > சாம்பர் என்பனவற்றில் ஓர் எழுத்துக்குப் பதிலாகப் பயன்படுத்தும் மற்றோர் எழுத்து

I. இணையெழுத்து II. துணையெழுத்து

III. போலியெழுத்து IV. சார்பெழுத்து

இவற்றுள்,

(1) I, II சரி (2) I, III சரி

(3) II, IV சரி (4) III, IV சரி

26. <u>உறுதிக்கூற்று</u> (உ) : தொல்காப்பியத்தை விடவும் முத்து வீரியம் குறைவான எண்ணிக்கையிலேயே உரிச்சொற்களைக் கூறியுள்ளது.

<u>காரணம்</u> (கா) : முத்து வீரியம் காலத்தில் உரிச்சொற்கள் குறைவாகவே பயின்றுள்ளன.

(1) (உ) சரி; (கா) சரி (2) (உ) சரி; (கா) சரியன்று

(3) (உ) சரியன்று; (கா) சரி (4) (உ) சரியன்று; (கா) சரியன்று

27. <u>உறுதிக்கூற்று</u> (உ) : தமிழ்ச் சொல்வகைகளுள் இடைச்சொல் என்பதும் ஒன்று.

<u>காரணம்</u> (கா) : பெயருமாகாது வினையுமாகாது இடை நிகர்த்தாய் இருப்பது அது.

(1) (உ) சரி; (கா) சரியன்று (2) (உ) சரி; (கா) சரி

(3) (உ) சரியன்று; (கா) சரி (4) (உ) சரியன்று; (கா) சரியன்று

28. <u>உறுதிக்கூற்று</u> (உ) : 'அ' எனும் எழுத்தை 'அஃகான்' எனவும் கூறுப.

<u>காரணம்</u> (கா) : அவ்வெழுத்தோடு எழுத்துச்சாரியை சேரும்போது அச்சொல் அவ்வாறு கூறப்படும்.

(1) (உ) சரி; (கா) சரி (2) (உ) சரி; (கா) சரியன்று

(3) (உ) சரியன்று; (கா) சரி (4) (உ) சரியன்று; (கா) சரியன்று

29. உறுதிக்கூற்று (உ) : நாலடியார், திருக்கோவையார், திருவுந்தியார் என்றெல்லாம் தமிழ்நூல்கள் உண்டு.

காரணம் (கா) : ஆள் பெயர்போல் நூற்பெயர் அமைத்தலும் பண்டைய மரபாகும்.

(1) (உ) சரி; (கா) சரி
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரியன்று
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

30. உறுதிக்கூற்று (உ) : விளக்கொளியும் வேசையர் நட்பும் வேறு அல்ல.

காரணம் (கா) : முன்னது நெய்யற்ற கண்ணும் பின்னது பொருள் கையற்ற கண்ணும் அறும்.

(1) (உ) சரி; (கா) சரி
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரியன்று; (கா) சரியன்று
(4) (உ) சரி; (கா) சரியன்று

31. உறுதிக்கூற்று (உ) : கள்ளினும் காமம் இனிது.

காரணம் (கா) : உள்ளினும் தீரா இடும்பைத் தருவது அது.

(1) (உ) சரி; (கா) சரி
(2) (உ) சரி; (கா) சரியன்று
(3) (உ) சரியன்று; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

32. உறுதிக்கூற்று (உ) : தலைவிக்கு ஒருநாள் எழுநாள் போற் செல்லும்.

காரணம் (கா) : சேண் சென்ற காதலர் வருநாள் வைத்து ஏங்குவள் அவள்.

(1) (உ) சரி; (கா) சரி
(2) (உ) சரி; (கா) சரியன்று
(3) (உ) சரியன்று; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

33. உறுதிக்கூற்று (உ) : தீயவை தீயினும் அஞ்சப்படும்.

காரணம் (கா) : தீப் பயப்பவை அவை.

(1) (உ) சரியன்று; (கா) சரி
(2) (உ) சரி; (கா) சரியன்று
(3) (உ) சரி; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

Prepp
Your Personal Exams Guide

34. <u>உறுதிக்கூற்று</u> (உ) : சுடுகாட்டை நன்காடு என்பர் புலவர்.

<u>காரணம்</u> (கா) : மங்கலம் பாடுவது புலவர்தம் மரபு.

(1) (உ) சரியன்று; (கா) சரி

(2) (உ) சரி; (கா) சரி

(3) (உ) சரியன்று; (கா) சரியன்று

(4) (உ) சரி; (கா) சரியன்று

35. <u>உறுதிக்கூற்று</u> (உ) : தமிழ் நிகண்டுகள் அனைத்தும் பூரண நிகண்டுகள் எனப்படுவன ஆகும்.

<u>காரணம்</u> (கா) : அவை அனைத்தும் சிதலமின்றி முழுமையாக உள்ளன.

(1) (உ) சரியன்று; (கா) சரியன்று

(2) (உ) சரி; (கா) சரியன்று

(3) (உ) சரியன்று; (கா) சரி

(4) (உ) சரி; (கா) சரி

Prepp Your Personal Exam Guide

36. <u>உறுதிக்கூற்று</u> (உ) : பன்னிருவருள் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்த திருப்பதிகளே மிகுதி.

<u>காரணம்</u> (கா) : மிகுதியான திருப்பதிகளுக்கு நேரில் சென்று அங்கு ஆழ்வார்களைப் புகழ்ந்து பாடினார்.

(1) (உ) சரி; (கா) சரி

(2) (உ) சரி; (கா) சரியன்று

(3) (உ) சரியன்று; (கா) சரி

(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

37. <u>உறுதிக்கூற்று</u> (உ) : பொருநராற்றுப்படையில் விறலி பற்றிய பாதாதிகேச வருணனை உள்ளது.

<u>காரணம்</u> (கா) : பெண் ஒருத்தியின் உறுப்பு நலனை முடி முதல் அடி வரை பாடும் மரபை அந்நூல் பின்பற்றியுள்ளது.

(1) (உ) சரி; (கா) சரி

(2) (உ) சரியன்று; (கா) சரி

(3) (உ) சரி; (கா) சரியன்று

(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

38. உறுதிக்கூற்று (உ) : கலம்பகத்தில் இடம்பெறும் துறைகளுள் மதங்கி என்பதும் ஒன்று.

காரணம் (கா) : ஓர் இளம் பெண் தன் இரு கரங்களிலும் வாளை ஏந்திச் சுழற்றிக் கொண்டே தானும் சுழன்று ஆடும் போது, அவளிடம் காதல் கொண்ட ஒருவன் தன் காதலை வெளிப்படுத்துவதாக அவ்விலக்கியத்தில் செய்யுள் அமைவது உண்டு.

(1) (உ) சரியன்று; (கா) சரியன்று
(2) (உ) சரி; (கா) சரியன்று
(3) (உ) சரியன்று; (கா) சரி
(4) (உ) சரி; (கா) சரி

39. உறுதிக்கூற்று (உ) : தலைவன் கூற்றுக்களுள் வன்புரை என்பதும் அடங்கும்.

காரணம் (கா) : தலைவி ஐயுற்ற வழி அந்த ஐயுறவு தீரத்தலைவன் வற்புறுத்திக் கூறுவது உண்டு.

(1) (உ) சரி; (கா) சரி
(2) (உ) சரி; (கா) சரியன்று
(3) (உ) சரியன்று; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

40. உறுதிக்கூற்று (உ) : திருமால், முருகன் மீது பிள்ளைத்தமிழ் பாடப்பட்டிருப்பதைப் போலவே சிவன் மீதும் பிள்ளைத் தமிழ் பாடப்பட்டுள்ளது.

காரணம் (கா) : பிறவா யாக்கைப் பெரியோனையும் அவ்வாறு பாடுவது பிள்ளைப்பாட்டின் மரபு ஆகும்.

(1) (உ) சரி; (கா) சரி
(2) (உ) சரி; (கா) சரியன்று
(3) (உ) சரியன்று; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

41. நிரல்படுத்துக.

சிற்றிலக்கியம் தோன்றிய கால வரிசை :

I. தூது
II. கோவை
III. சதகம்
IV. அந்தாதி
V. கலம்பகம்

(1) I, III, V, II, IV
(2) II, IV, I, III, V
(3) III, I, IV, II, V
(4) IV, II, V, III, I

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

42. நிரல்படுத்துக.
சேனாவரையர் கூறும் ஐந்தாம் வேற்றுமைப் பொருள்கள் :

I. எல்லை  II. ஏது
III. நீக்கம்  IV. பொருவு

(1) I, III, II, IV  (2) IV, I, III, II
(3) II. IV, I, III  (4) III, II, IV, I

43. நிரல்படுத்துக.
விளிகொள் பெயர்களின் புள்ளி இறுதிகள் :

I. ல்  II. ள்
III. ர்  IV. ண்

(1) IV, III, I, II  (2) III, I, II, IV
(3) II, IV, III, I  (4) I, III, II, IV

44. நிரல்படுத்துக.
இறையின் ஐந்தொழில்கள் :

I. மறைப்பு  II. நிலை
III. அருள்  IV. இறுதி
V. தோற்றம்

(1) II, IV, I, III, V  (2) III, I, V, II, IV
(3) V, II, IV, I, III  (4) IV, II, V, III, I

45. நிரல்படுத்துக.
பிறனில் நச்சுவார்க்குச் சேராதவை :

I. புகழ்  II. அறம்
III. பெருமை  IV. கேண்மை

(1) III, I, II, IV  (2) IV, II, I, III
(3) II, I, IV, III  (4) I, III, IV, II

46. நிரல்படுத்துக.
தண்டி கூறும் தீவக அணி வகை :

I. பொருள்  II. குணம்
III. சாதி  IV. தொழில்

(1) I, III, II, IV  (2) II, IV, III, I
(3) III, II, I, IV  (4) IV, II, I, III

Prepp Your Personal Exam Guide

47. நிரல்படுத்துக.

குற்றங்கள் எனத் தலையாயவர் கருதுவன :

I. நோய் II. நிலையாமை

III. சாக்காடு IV. மூப்பு

(1) I, III, II, IV (2) II, I, IV, III

(3) III, II, I, IV (4) IV, II, I, III

48. நிரல்படுத்துக.

இசைப்பொருள் உணர்த்தும் உரிச்சொற்கள் :

I. இயம்பல் II. இரங்கல்

III. சிலைத்தல் IV. துவைத்தல்

(1) IV, III, I, II (2) III, I, IV, II

(3) II, IV, III, I (4) I, III, IV, II

49. நிரல்படுத்துக.

I. வேட்கையுரைத்தல் II. கூறுதலுசாஅதல்

III. எளித்தல் IV. ஏத்தல்

(1) III, IV, I, II (2) III, II, IV, I

(3) II, IV, I, III (4) I, II, III, IV

50. நிரல்படுத்துக.

பெட்டை என்னும் பெயர்க் கொடைக்கு உரியவை:

I. மரை II. ஒட்டகம்

III. கழுதை IV. குதிரை

(1) IV, III, I, II (2) III, I, IV, II

(3) I, III, IV, II (4) II, IV, III, I

51. நிரல்படுத்துக.

வெறுங்கையோடு இலங்கை புகுமுன் களத்தே இராவணன் போக்கியவை :

I. தாரணி மவுலிபத்தும் சங்கரன் கொடுத்தவாளும்.

II. நாரத முனிவர்க்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும்.

III. வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்.

IV. வீரமும் களத்தே போட்டு வெறுங்கையே மீண்டுபோனான்

(1) II, III, I, IV
(2) I, III, II, IV
(3) III, I, II, IV
(4) III, II, I, IV

52. நிரல்படுத்துக.

இயற்பெயர் வகை (தொல்காப்பியத்தின்படி) :

I. ஆண்மை
II. ஒருமை
III. பெண்மை
IV. பன்மை

(1) III, II, I, IV
(2) I, III, II, IV
(3) III, I, IV, II
(4) II, III, I, IV

53. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (A) | குழூஉக்குறி | (I) | சொல்லிசையளபெடை |
| (B) | படூஇயர் | (II) | செய்யுளிசையளபெடை |
| (C) | எடுப்பதூஉம் (எல்லாம் மழை) | (III) | இயற்கையளபெடை |
| (D) | படாஅ (பறை) | (IV) | இன்னிசையளபெடை |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | I | IV | III |
| (2) | III | I | IV | II |
| (3) | IV | III | II | I |
| (4) | III | IV | II | I |

Prepp Your Personal Exam Guide

54. பொருத்துக:

(A) திருவேங்கடமாலை (I) மீனாட்சிசுந்தரம் பிள்ளை

(B) திருவானைக்கா மாலை (II) மாயூரம் வேதநாயகம் பிள்ளை

(C) திருவருள் மாலை (III) துறைமங்கலம் சிவப்பிரகாசர்

(D) நிரஞ்சன மாலை (IV) கவி குஞ்சரபாரதி

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | I | IV | III |
| (2) | III | I | IV | II |
| (3) | IV | I | II | III |
| (4) | IV | III | II | I |

55. பொருத்துக:

(A) உயர்பொருட் பேறு (I) சேரி

(B) இழிபொருட் பேறு (II) களிப்பு

(C) நுண்பொருட் பேறு (III) விருந்து

(D) பருப்பொருட் பேறு (IV) சூழ்ச்சி

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | III | I | IV | II |
| (2) | II | I | IV | III |
| (3) | IV | I | II | III |
| (4) | IV | III | II | I |

56. பொருத்துக:

(A) மாண்ட மனையாளை இல்லாதான் இல்லகம் (I) செத்த பிணத்தின் கடை

(B) குடி கொழுத்தக் கண்ணும் கொடுத்துண்ணா மாக்கள் (II) காண்டற்கு அரியதோர் காடு

(C) ஒத்த குடிப்பிறந்த கண்ணும் ஒன்றில்லா தார் (III) நெய்யிலாப் பாற்சோறு

(D) உலகம் அறியாமை (IV) இடுகாட்டுள் ஏற்றுப் பனை

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | III | II | I |
| (2) | IV | I | II | III |
| (3) | III | I | IV | II |
| (4) | II | IV | I | III |

57. பொருத்துக:

(A) மன் (I) கழிவு

(B) தில் (II) வினா

(C) உம் (III) விழைவு

(D) ஒ (IV) எச்சம்

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | I | III | IV | II |
| (2) | II | IV | I | III |
| (3) | III | I | IV | II |
| (4) | IV | III | II | I |

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

58. பொருத்துக:

(A) 'அழா அல் மறந்த புன்றலைச் சிறார்' என்பதில் 'ஆல்' — (I) அசைநிலை

(B) 'மரீஇயது ஒராஅல்' என்பதில் 'ஆல்' — (II) நிபந்தனை வினையெச்ச விகுதி

(C) கடுமைய காடு என்றால் என்பதில் 'ஆல்' — (III) எதிர்மறை வியங்கோள் விகுதி

(D) பகல் வந்தன்றால் பாய்பரி சிறந்தே என்பதில் 'ஆல்' — (IV) தொழிற்பெயர்

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | III | I | IV | II |
| (2) | II | IV | I | III |
| (3) | IV | I | II | III |
| (4) | IV | III | II | I |

59. பொருத்துக:

(A) ஐந்திணை ஐம்பது — (I) மூவாதியார்

(B) ஐந்திணை எழுபது — (II) மாறன் பொறையனார்

(C) திணை மொழி ஐம்பது — (III) கணி மேதாவியார்

(D) திணை மாலை நூற்றைம்பது — (IV) கண்ணஞ் சேந்தனார்

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | I | IV | III |
| (2) | III | I | IV | II |
| (3) | IV | I | II | III |
| (4) | III | IV | II | I |

Prepp Your Personal Exam Guide

Prepp
Your Personal Exams Guide

60. பொருத்துக:

(A) தமிழ் ஒளி (I) ராஜகோபால்

(B) சுரதா (II) விஜயரங்கம்

(C) தமிழ்வாணன் (III) வேணுகோபாலன்

(D) புஷ்பா தங்கதுரை (IV) இராமநாதன்

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | I | III | IV | II |
| (2) | II | I | IV | III |
| (3) | III | IV | II | I |
| (4) | IV | I | II | III |

61. பொருத்துக:

(A) இதரவிதரவுவமை (I) பிரதிவஸ்தூபமை

(B) மறு பொருளுவமை (II) சஞ்சயோபமை

(C) ஐயவுவமை (III) நிர்ணயோபமை

(D) தேற்றவுவமை (IV) அந்நியோந்நியோபமை

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | I | III | IV | II |
| (2) | II | I | IV | III |
| (3) | III | IV | II | I |
| (4) | IV | I | II | III |

62. பொருத்துக:

(A) சந்திர விலாசம் (I) முத்தப்பச் செட்டியார்

(B) சமுத்திர விலாசம் (II) தாயுமானவர்

(C) சிதம்பர விலாசம் (III) கடிகை முத்துப்புலவர்

(D) திருமுக விலாசம் (IV) மாம்பழக் கவிச்சிங்க நாவலர்

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | III | IV | II | I |
| (2) | II | I | IV | III |
| (3) | IV | III | II | I |
| (4) | IV | I | II | III |

Prepp Your Personal Exams Guide

63. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (A) | புறநகர் | (I) | ஒப்பில் போலி |
| (B) | வருவார் போல | (II) | இலக்கணப் போலி |
| (C) | அஞ்சு (ரூபாய்) | (III) | கடைப் போலி |
| (D) | பந்தர் | (IV) | முற்றுப் போலி |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | I | IV | III |
| (2) | IV | III | II | I |
| (3) | III | IV | II | I |
| (4) | III | II | IV | I |

64. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (A) | உதயதாரகை | (I) | 1886 |
| (B) | தத்துவ போதினி | (II) | 1869 |
| (C) | ஜந. விநோதிநி | (III) | 1841 |
| (D) | தத்துவ விவேசினி | (IV) | 1864 |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | III | II | IV | I |
| (2) | IV | III | II | I |
| (3) | II | I | IV | III |
| (4) | III | IV | II | I |

65. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (A) | ஓங்கிய மொழியான் ஆங்கவண் மொழிவது | (I) | விருந்து |
| (B) | ஞ காரை முதலா ந காரை யீற்றுப் புள்ளியிறுதி வருவது | (II) | தொன்மை |
| (C) | உரையொடு புணர்ந்த பழமை மேற்றது | (III) | இயைபு |
| (D) | புதுவது புனைந்த யாப்பின் மேற்றே | (IV) | இழைபு |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | III | II | IV | I |
| (2) | IV | III | II | I |
| (3) | II | I | IV | III |
| (4) | III | IV | II | I |

www.prepp.in

66. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (A) | நீதி சிந்தாமணி | (I) | மாயூரம் வேதநாயகம் பிள்ளை |
| (B) | நீதி நூல் | (II) | வேதகிரி முதலியார் |
| (C) | நீதி மஞ்சரி | (III) | இராமானந்த அடிகள் |
| (D) | நீதி வாக்கியம் | (IV) | இராகவாசாரி |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | III | II | IV | I |
| (2) | IV | III | II | I |
| (3) | II | I | IV | III |
| (4) | III | IV | II | I |

67. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (A) | நம்மாழ்வார் நான்மணிமாலை | (I) | சுப்பிரமணிய பாரதியார் |
| (B) | நால்வர் நான்மணிமாலை | (II) | சிவப்பிரகாச சுவாமிகள் |
| (C) | மஸ்தான் சாகிபு நான்மணிமாலை | (III) | பள்ளி கொண்டான் பிள்ளை |
| (D) | விநாயகர் நான்மணிமாலை | (IV) | சரவணப் பெருமாளையர் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | III | II | IV | I |
| (2) | IV | III | II | I |
| (3) | II | I | IV | III |
| (4) | III | IV | II | I |

www.prepp.in

(68 – 75) பின்வரும் பகுதியைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக :

உறையுள் என்பது குடியிருக்கும் வீடு. குறிஞ்சிநில வாணரான குறவர் குன்றவர், இறைவுளர் முதலிய வகுப்பாரும், பாலைநில வாணரான மறவர், எயினர், வேடர் முதலிய வகுப்பாரும், இலைவேய்ந்த குடிசைகளிலும் குற்றில்களிலும், முல்லைநில வாணரான இடையர் கூரை வேய்ந்த சிற்றில்களிலும், மருதநிலச் சிற்றூர் வாணரான உழவர் மண்சுவர்க் கூரை வீடுகளிலும் வதிந்தாரேனும்; மருதநிலப் பேரூர் வாணர் ஏந்தான (வசதியான) பச்சைச் செங்கற் சுவர்க்கூரை வீடுகளிலும் சுட்ட செங்கற் சுவர்க்காரை வீடுகளிலும் வாழ்ந்து வந்தனர். சுட்ட செங்கல் சுடுமண் என்றும் சுடுமட் பலகை என்றும் சொல்லப்பட்டது. பச்சைச் செங்கல் மட்பலகையெனப்பட்டது.

"சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பில்" (பெரும்பாண் : 405)

"சுடுமண் பலகை பல கொணர்வித்து" (பெரிய பு. ஏயர் கோன். 49)

சிறு செங்கல் இட்டிகை எனப்பட்டது.

"கண் சொரீஇ இட்டிகை தீற்றுபவர்"

(பழ. 108)

இட்டிது = சிறிது (குறள் : 478)

இட்டிமை = சிறுமை (தி. வா) இட்டிய = சிறிய (ஐங். 215)

இட்டிகை என்பது, வடமொழியில் இஷ்டிகா என்று திரிந்து தன் சிறப்புப் பொருளையிழந்து, செங்கல் என்று மட்டும் பொருள்படும்.

சிறியதும் பெரியதும் உயர்ந்ததும் தாழ்ந்ததும் அல்லாது நடுநிகர்த்தான் உறையுள், குடி, மனை, இல், வீடு என்னும் சொற்களுள் ஒன்றாற் குறிக்கப் பெறும். இல்லம், வளமனை, மாளிகை, நகர், என்பன, பெருஞ் செல்வர் வாழும் சிறந்த உறையுளைக் குறிக்கும்

அரசர் வாழும் மாளிகை அரண் பெற்றிருக்குமாதலால், அரண்மனை எனப்பெறும்; அரசன் மனை என்னும் பொருளிற் கோயில் என்றும் சொல்லப் பெறும்.

குடி, நகர், மாளிகை என்னும் தூய தமிழ்ச் சொற்கள் வடமொழிச் சென்றும் வழங்குகின்றன. மேனிலையுள்ள வீடு மாடம் எனப்பட்டது. அது உலக வழக்கில் மாடி வீடு எனவும் மெத்தை வீடு எனவும் வழங்கும். இருநிலை முதல் எழுநிலைவரை அக்காலத்து மாடங்கள் கட்டப்பட்டன.

"இன்அகில் ஆவி விம்மும் எழுநிலை

மாடஞ் சேர்ந்தும்" (சீவக. 2840)

ஒவ்வொரு மாடமும் அல்லது மாளிகையும் சுற்றுச்சுவர், முகமண்டபம், தலைவாசல், இடைகழி (நடை) முன்கட்டு, உள்முற்றம், பின்கட்டு, கூடம், அடுக்களை (சமையலறை), புழைக்கடை (கொல்லைப்புறம்); மனைக் கிணறு, குளியலறை, சலக்குழி (கக்கூசு), சாலகம் அல்லது அங்கணம் என்னும் பகுதிகளையுடையதாயிருந்தது. மேனிலையில் நிலாமுற்றமிருந்தது.

"வகைபெற எழுந்து வானம் மூழ்கிச்

சில்காற் றிசைக்கும் பல்புழை நல் இல்"

(357-8) என்னும் மதுரைக்காஞ்சி அடிகட்கு

"மண்டபமும் கூடமும் தாய்க்கட்டு அடுக்களை

என்றாற் போலும் பெயர்களைப் பெறுதலின்,

வகைபெற வெழுந்தென்றார்" என்று நச்சினார்க்கினியர் சிறப்புரை வரைந்திருத்தல் காண்க.

வணங்கு - வாங்கு - வங்கு - அங்கு

ஓ. நோ : வளை - அளை.

அங்குதல் = வளைதல், சாய்தல்; அங்கு - அங்கணம்

ஓ. நோ : சாய்கடை - சாக்கடை

காற்று வரும் வழி காலதர், சாளரம், பலகணி

என்னும் பெயர்களைப் பெற்றிருந்தது.

காரைவீடுகள் உச்சியில் ஓடு வேய்ந்தும்

மச்சுப் பாவியும் இருவகையா யிருந்தன

ஓடும் இலக்கிய வழக்கில் சுடுமண் எனப்பட்டது.

"சுடுமண் ஏறா வடுநீங்கு சிறப்பின்

முடியரசு ஒடுங்கும் கடிமனை" (சிலப் : 14 – 146 –7)

என்பதற்கு ஓடு வேயாது பொற்றகடு வேய்ந்த மனை என்று அருஞ்சொல்லுரைகாரர் ஓர் உரை வரைந்திருப்பது கவனிக்கத்தக்கது. முடிவேந்தரும் விரும்பும் நாடகக் கணிகையர் மனைகளாதலின் பொற்றகடு வேய்ந்ததாகவும் இருந்திருக்கலாம். காஞ்சிநகரிற் பலர் கூடுதற்குரிய பொது அம்பலமும் பொன்னால் வேயப்பட்டிருந்ததாக மணிமேகலை கூறுதல் காண்க.

"சாலையுங் கூடமுந் தமனியப் பொதியிலும் (மணிமே : 28 : 66)

"மழை தோயும் உயர்மாடத்து" (145)

என்னும் பட்டினப் பாலையும்

"மாடம் அழிந்தக்கால் மற்றும் எடுப்பதோர்

கூடம் மரத்திற்குத் துப்பாகும்."(பழ. 71)

என்னும் பழமொழிச் செய்யுளும்

மாடத்தின் பெருமையை உணர்த்தும்.

68. மட் பலகை என்பது

(1) சுட்ட செங்கல்

(2) பச்சைச் செங்கல்

(3) சுடுமண்

(4) சிறு செங்கல்

69. பொருத்துக:

| | |
|---|---|
| (A) குறிஞ்சி | (I) எயினர் |
| (B) பாலை | (II) இடையர் |
| (C) முல்லை | (III) உழவர் |
| (D) மருதம் | (IV) குன்றவர் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | I | III | II |
| (2) | IV | III | II | I |
| (3) | IV | I | II | III |
| (4) | IV | II | III | I |

70. நிரல்படுத்துக.

(1) குடி, மனை, வீடு, இல்

(2) குடி, வீடு, மனை, இல்

(3) குடி, இல், மனை, வீடு

(4) குடி, மனை, இல், வீடு

www.prepp.in
Prepp Your Personal Exams Guide

71. உறுதிக்கூற்று (உ) : அரசர் மாளிகை அரண்மனை எனப்பட்டது.
காரணம் (கா) : அம்மாளிகை அரண் உடையது.
(1) (உ) சரி; (கா) சரியன்று
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

72. வடமொழிச் சென்று வழங்கும் தமிழ்ச் சொற்கள்
I. குடி
II. வீடு
III. நகர்
IV. மாளிகை
இவற்றுள்,
(1) I, II, III சரி
(2) II, III, IV சரி
(3) I, III, IV சரி
(4) I, II, IV சரி

73. குறளில் 'சிறிது' என்னும் பொருளுடைய சொல்
(1) இட்டிமை
(2) இட்டிகை
(3) இட்டிது
(4) இட்டிய

74. நகர் என்பது
(1) மக்கள் வாழும் பெருநகரம்
(2) அரசர் வாழும் இல்லம்
(3) பெருஞ்செல்வர் வாழும் வீடு
(4) எழு நிலை மாடங்கொண்ட எழில்மனை

75. பொருத்துக:
(A) நடை — (I) ஏந்து
(B) கக்கசு — (II) இடை கழி
(C) அங்கணம் — (III) சலக்கப்புரை
(D) வசதி — (IV) சாலகம்

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | III | IV | I |
| (2) | II | III | I | IV |
| (3) | II | IV | III | I |
| (4) | II | IV | I | III |

Prepp
Your Personal Exams Guide

Space For Rough Work

Prepp
Your Personal Exam Guide